அதற்குத் தேவையான நிலத்தை வாங்குவதிலே பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, திட்டத்தை பின் பகுதியில் கொண்டுவந்தாலும் கூட அதற்கு முன்பாக அந்தத் திட்டத்திற்கான இடங்களை அரசு மூலமாக பெற்று அந்தத் திட்டத்தை அமைப்பதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கையில் அரசு ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இதுபோன்ற நிலத்தை ஆய்வு செய்வதிலே எந்த எந்த இடங்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பது பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடம் என்று சுட்டிக்காட்டினால் அதுபற்றி ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 172, திருமதி ஜீனத் சர்புதீன், இருக்கையில் இல்லை.

வினா எண் 173, திரு. ஆர். ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 174, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

174—

தோட்ட நிறுவனத்தினரின் நலத் திட்டங்கள் பற்றிய அறிக்கை.

*11728 டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத்திலுள்ள தொழிலாளர்களுக்கு தோட்ட நிறுவனத்தினர் அளித்து வரும் நலத் திட்டங்கள் பற்றிய விபர அறிக்கையை அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு அளிக்குமாறு செய்ய அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து அளிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நல அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மலைத் தோட்டங்கள் தொழிலாளர் சட்டத்திலோ அல்லது விதிகளிலோ மேற்கூறப்பட்ட அறிக்கைகளை தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்க ஏதும் வரையறுக்கப்பட

1993 மார்ச் 30]

வில்லை. எனினும் வால்பாறை தேயிலைத் தோட்டத்திலுள்ள தொழிலாளர்களுக்கு தோட்ட நிறுவனத்தினர் அளித்துவரும் நலத்திட்டங்கள் பற்றிய விபர அறிக்கை வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு தொழிலாளர் ஆணையரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) எழாது.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதி என்பது சுமார் 90 ஆயிரம் வாக்குகள் தோட்டத் தொழிலாளர்களால் வாக்களிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தொகுதியைச் சுற்றி மக்களுடைய குறைகளைக் கேட்கின்றபோது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய அடிப்படைத் தேவைகள் According to the plantation Labour Act-படி ஒரு தொழிலாளிக்கு என்ன அடிப்படைத் தேவையோ அவைகள் பலயிடங்களில் பல எஸ்டேட்டுகளில் கொடுக்கப் படாமல் இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகளைத் தொடர்புகொண்டு அத்தியாவசியத் தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா? அதனுடைய முறை சட்டமன்ற உறுப்பினருக்கு தெரிவிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் தோட்டத் தொழில் ஆய்வாளர்கள் மூலமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, State Labour Welfare Advisory Committee என்கின்ற அந்தக் கூட்டத்தில் கூட இதுகுறித்து நான் பேசியிருக்கிறேன். எனவே, தொடர்ந்து பல்வேறு கூட்டங்களில் நான் இது தொடர்பாக பேசியிருந்தும்கூட இன்னும் அந்த அப்பாவி தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்குத் தரப்பட வேண்டிய அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப் படாத காரணத்தால் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இதில் சிறப்புக் கவனம் எடுத்து நம்முடைய அரசு இயந்திரத்தை முடுக்கிவிட்டு ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

[1993 மார்ச் 30

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள நலத் திட்டங்களைத் தவிர வேறு தனிப்பட்ட நலத் திட்டங்கள் எதுவும் அரசால் வரையறுக்கப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள நலத் திட்டங்கள் வீட்டு வசதி, மருத்துவ வசதி, குடிநீர், மகப்பேறு மருத்துவ சலுகைகள், குழந்தைகள் காப்பகங்கள் மற்றும் பொழுது போக்கு வசதிகள் தோட்டத் தொழிலாளர் நிர்வாகத்தால் அமலாக்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் நல வாரியத்தால் தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி சட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிற அனைத்து நலத் திட்டங்கள் இந்தச் சட்டத்தின் கீழ் அனைத்து தோட்டத் தொழிலாளர்களுக்கும் அமலாக்கப்படுகிறது. எனவே, இது குறித்து வேறு ஏதேனும் குற்றங்கள், குறைகள், புகார்கள் இருப்பின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அந்த நிர்வாகத்தாரால் பல்வேறு நலத் திட்டங்கள் நடந்து கொண்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நலத்திட்டங்கள் அனைத்தும் ஒழுங்கான முறையில் செயல்படுத்தப்படுகிறதா என அறிய தனியாக ஒரு குழுவை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான சலுகைகள் அமலாக்கப்படுவதில் ஏதேனும் குறைகள் இருப்பின் அதனைத் தீர்ப்பதற்கு தொழிலாளர் நல ஆணையர் மற்றும் தோட்டத் தொழிலாளர் ஆய்வாளர் போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 175 திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.